# இலங்கை வித்தியா போதினி

# THE CEYLON JOURNAL OF EDUCATION

(*Tamil Section.*)

பிரதம பத்திராதிபர் :

திரு. எச். டப்ளியு. ஹௌஸ் அவர்கள்.

பத்திராதிபர் சபை :

திரு. எம். எவ். டீ. எஸ். ஜயரத்ன அவர்கள்.

பண்டிதர். அ. சிற்றம்பலம் அவர்கள்.

திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள்.

திரு. எம். எஸ். எம். ஹட்டாட் அவர்கள்.

மனேஜர் :— திரு. சி. குணசேகர அவர்கள்.

வருடச் சந்தா ரூபா **3-00**

*சந்தாப் பணத்தை கொழும்பு, வித்தியா கந்தோர், இலங்கை வித்தியா போதினி மனேஜர் என்ற விலாசத்துக்கனுப்பவேண்டும்.*

அறிவித்தல்:—செக் மூலம் பணம் கொடுத்தல். சில வங்கிகள் ரூ. 10/-க்குக் குறைந்த செக்குகளுக்கும் கொழும்பு தவிர்ந்த ஏனைய இடங்களிலிருந்து வரும் செக்குகளுக்கும் கொமிஷன் எடுக்கின்றபடியால் சந்தாதார் அவ்வகைச் செக்குமூலம் பணம் கொடுக்கும்போது கொமிஷனையும் செக்குகளில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும் கட்டுரையாளர் வெளியிடும் அபிப்பிராயங்களைப் பிரதம பத்திராதிபரும் பத்திராதிபர் சபையினரும் கட்டாயமாக ஒப்புக்கொள்ளுகின்றனரென வாசகர்கள் கருதக்கூடாது.

தோகுதி–8 | பெப்ரவரி — **1950.** | பகுதி–2


## பத்திராதிபர் குறிப்புகள்

இம்முறை பொது ஆசிரியரென்ற வகையில் 'நாம்' என்னுஞ் சொல்லை உபயோகித்தலை யான் தவிர்க்கின்றேன். வித்தியாதிபதி என்ற முறையில் என் சொந்தப் பொறுப்பில் சில விஷயங்களைக் கூற

விரும்புவதனுலேயே இங்ஙனம் செய்கின்றேன். நான் இலங்கைக்கு வந்து மிகவும் சிறிது காலமே ஆகிறது; இதற்குள் எனக்குப் பல ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன; இந்நாட்டில் கல்வித்துறையில் பல விற்பன்னர்கள் இருக்கிறார்களென்பதையும் நான் கண்டுவிட்டேன்! என்னோடு பேசியவர்களுட் பலர் எனக்கு உதவிபுரியக் கூடிய விஷயங்களைக் கூறியிருக்கிறார்கள்; ஆனால் வேறு பலர் கண்டனங்களையே நிகழ்த்தியிருக்கின்றனர்; இவற்றுட் பல, ஆட்களுக் கெதிரான கண்டனங்களாக இருந்தன. இக்கண்டனங்கள் எனக் கெதிராக இருந்தனவென்று யான் கூறவில்லை; ஆனால் கல்வித்துறை யில் ஈடுபட்டுள்ளோர் பலரைத் தாக்குவனவாக இருந்தன. மேலும் எமது கல்விநிலை மிகவும் குழம்பிய நிலையில் இருப்பதாக எனக்குப் பலரும் கூறியிருக்கின்றனர்; 'உங்களுக்கு எனது அநுதாபம் உரியது; எக்காரணத்தை முன்னிட்டும் உங்கள் வேலையை நான் மேற் கொள்ளமாட்டேன்' என்னும் பொருள்படவே அவர்கள் பேச்சு இருந் தது என்பதை அறிந்து வாசகர்கள் ஆச்சரியப்படத் தேவையில்லை.

கல்வி விஷயத்தில் சிறிதளவு குழப்பம் இருக்கிறதென்பதையும் இன்னும் எவ்வளவோ காரியங்கள் நாம் செய்யவேண்டியனவாய் இருக்கின்றனவென்பதையும் நான் அறிவேன். பிழையான காரியங் களைச் செய்யும் ஆடவர்களையும் பெண்களையும் கண்டிப்பதற்குக் கார ணங்கள் இருக்கலாம்; ஆனால் இவ்விஷயத்தில் நாம் மிகவும் அவதா னமாயிருந்து எம் முடிபுகளுக்கு நாம் ஆதாரமாகக் கொண்டுள்ள விஷயங்கள் யாவும் சரியென்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவேண்டும். பொதுநன்மையல்லாத காரணங்களுக்காக ஒருவரைக் கண்டித் தோமேயானல் நாம் எமது தொழில்முறைக்கு ஏற்காதவகையில் அகௌரவமாக ஒழுகுபவராவோம். கல்வி விஷயத்தில் ஈடுபட்ட நாமெல்லோரும் ஒரு தொழில் வகுப்பைச் சேர்ந்தவராவோம்; ஆகையால் நாம் அத் தொழில் வகுப்புக்குத் தகுந்த முறையில்

கௌரவமாக ஒழுகுதல் வேண்டும். எமது தொழில் வகுப்பைச் சேர்ந்தவர்களுக் கெதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை ஆராய்வ தற்குரிய காரணங்கள் வரவரக் குறையுமென்றே நான் மனப்பூர்வமாக நம்புகின்றேன். இந்தக் குறிக்கோள் நிறைவேறுவதற்கு நாமெல்லோ ரும் உயர்ந்த தொழில் நோக்கம் உடையவர்களாக இருத்தல் வேண் டும். இதை வேறுவிதமாகக் கூறுவதாயிருந்தால் பின்வருமாறு கூறலாம். கல்வி விஷயத்தில் ஈடுபட்டுள்ள எவரும் தாம் செய்யும் எக் காரியத்தையும் பட்சபாதமற்ற பொதுமக்கள் விசாரணைக்குச் சமர்ப் பிக்க ஆயத்தமாயிருத்தல் வேண்டும். அங்ஙனம் பட்சபாதமற்றவர் விசாரணைக்குச் சமர்ப்பிக்க விருப்பமில்லாத காரியங்களை அவர்கள் செய்யக்கூடாது. ஆசிரியர்களும் கல்வி நிர்வாகத்தில் அமர்ந்திருப்ப வர்களும் எப்பொழுதும் சிறுபிள்ளைகளின் உருவங்களைத் தம் அகக் கண்ணின் முன்னுக அமைத்துக்கொள்ளல் வேண்டும்; அங்ஙனம் அமைத்துக்கொண்டால் தொழில் முறைக்குத் தகாத அகௌரவமான நடத்தையைப்பற்றிப் பேசவோ எழுதவோ வேண்டிய சந்தர்ப்பம் வரவரக் குறையும்.

'நற்குணம் புதினச் செய்தி யன்று' என யாரோ ஒருவர் கூறி யிருக்கிறுர்; இது உண்மையான கூற்றெனவே நான் நம்புகிறேன். இலங்கையிலுள்ள பிள்ளைகளுக்கு உதவி புரிவதற்காக நூற்றுக்கணக் கான ஆசிரியர்கள் விசுவாசத்தோடு கடுமையாக உழைக்கின்றனர்; ஆனுல் அவர்களைப்பற்றிய பிரசாரமொன்றும் வெளிவருவதில்லை. யாராவது பிழையான காரியமொன்றைச் செய்தால் அது புதினச் செய்தியாக வெளிவருகிறது. ஆகையால் மிகவும் சிறப்புவாய்ந்ததா கிய எம் தொழிலுக்கு ஏற்க நடத்தலே எமது நோக்கமாயிருத்தல் வேண்டும். எம் நண்பர்களாலும் அளவிட முடியாதவகையில் சிறு பிள்ளைகள் எம் தகுதியை மதிப்பிடுவார்கள். பிள்ளைகள் எம்மிட மிருந்து பல்வேறு வகைகளிற் கல்வி பயிலுகின்றனர்; புத்தகங்களி லிருந்தும் கைவேலையினுலும் மாத்திரமல்ல; எம்முடைய பழக்கவழக்

கங்கள், பேச்சு, வாழ்க்கைமுறை ஆகிய எல்லாவற்றிலிருந்தும் அவர்கள் பல விஷயங்களைக் கற்றுக்கொள்கின்றனர். இதனை மனதிற் கொண்டு ஆசிரியர்மீது பெரும் பொறுப்பு அமைந்திருக்கிறதென்பதை ஞாபகத்தில் வைத்திருக்குமாறு வாசகர்களை வேண்டுகின்றேன். ஆசிரியர் குழந்தையோடு தனிப்பட்ட முறையில் ஊடாடும் வகையினால் அக்குழந்தையின் குணவியல்புகளை ஆக்கவும் அழிக்கவும் முடியும்.

இலங்கையின் கல்வி நிலையையிட்டு நான் மனத்தாங்கல் கொள்ளவில்லை. பல பிரச்சினைகள் இருக்கின்றன; ஆனால் பிரச்சினைகள் ஏற்படுவது தீர்ப்பதற்காகவே. கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் சிறந்த முறையில் உழைத்தால் நாம் முன்னேறலாம். பாடசாலைக் கட்டிடங்கள் முக்கியமானவையே; ஆனால் ஆசிரியர் அவைகளிலும் பார்க்க மிக முக்கியமானவர்; இவ்வெண்ணம் என் மனதில் நன்கு பதிந்துள்ளதென்பதை நான் உங்களுக்கு உறுதியாக எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆசிரியர் தற்கால முறைகளை அறிந்தவராய்ப் புதியனவற்றைக் கற்றலில் எப்பொழுதும் மாணவருடைய மனப்பான்மையைக் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

ஒரு விண்ணப்பத்துடனும் ஓர் வாக்குறுதியுடனும் இதனை நான் முடிக்க விரும்புகின்றேன். விண்ணப்பம் கல்வி விஷயத்தில் சம்பந்தப்பட்ட எல்லோருக்குமாகும்; யான் அவர்களைக் கேட்டுக் கொள்வதென்னவென்றால், அவர்கள் பிள்ளைகள் சம்பந்தப்பட்டவரையில் தம் மனச்சான்றை ஆராய்ந்து தம் வாழ்க்கையினாலும், முன் மாதிரியினாலும், வேலையினாலும் முயன்று இலங்கையிலுள்ள சிறுவர் சிறுமியருக்கு நன்மையளிக்கக்கூடிய ஓர் கல்விமுறையை அமைத்தற்கு உதவிபுரிதல் வேண்டுமென்பதேயாம். இதற்கு முற்றாக எதிர்மறையில் யாராவது விடை பகர்வார்களேயானால், அவருக்கு யான் கூறக் கூடியது, எவ்வளவு சீக்கிரத்தில் அவர் கல்வி சம்பந்தமான விஷயங்

களிலிருந்து விலகுகிறுரோ அவ்வளவுக்கு நன்மை உண்டாகும் என்பதேயாகும். இதற்கு மாருக, இப்பொழுது தாம் தம்மால் இயன்ற அளவு வேலே செய்யவில்லேயென்று உணருகின்றவர்களும் இனி அங்ஙனம் செய்ய முயல்வார்களெனவே நான் உறுதியாக நம்பு கிறேன். நான் என்னுடைய சகாக்களேச் செய்யுமாறு வேண்டுங் காரியங்களேயெல்லாம் நானும் எப்பொழுதும் செய்ய முயல்வேனென உங்களுக்கு மனப்பூர்வமாக வாக்குறுதி அளிக்கின்றேன். நாமெல்லோரும் ஒத்துழைத்தால் பெரிய காரியங்களேயெல்லாம் சாதிக்க முடியும்; இது எனக்காகவுமன்று, உங்களுக்காகவுமன்று; எமது பாதுகாப்பில் விடப்பட்டிருக்கும் குழந்தைகளின் பொருட்டேயாகும்.

எச். டப்ளியு. எச்.

---

# தொழில்முறைக் கல்வியும் செய்து கற்றலும்.

---

**1949**-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ந் திகதி பிலியந்தலேயில் நடைபெற்ற மேல்மாகாணக் கல்லூரித் தலேவர்கள், ஆங்கில உதவி யாசிரியர்கள் ஆகியோர் மகாநாட்டில்,

திரு. எவ். ஜி. பியேர்ஸ் அவர்கள்

ஆற்றிய சொற்பொழிவு.

---

'தொழில்முறைக் கல்வி' என்னும் விஷயம்பற்றிப் பலரும் பல வாறு கூறியும் வாதித்தும் வருவதுமன்றி அவ்விஷயம்பற்றி மலேவுக் கிடமான அபிப்பிராயங்களும் நிலவுகின்றன. இப்பிரச்சினேயைத் தக்கவகையில் தீர்த்துக்கொள்வதற்கு முன்னர், நாம் உபயோகிக்கும்

சொற்களின் கருத்துக்கள் இவையென்பதையும், அவை கல்வித் துறையின் எத்தகைய படிகளுக்கு ஏற்றவை என்பதையும் யாம் தெளிவாக முதலில் அறிந்துகொள்ளவேண்டும்.

தொழில் பெறப் பயிற்சியளிப்பதையே முழு நோக்கமாக அல்லது பிரதான நோக்கமாகக் கொண்ட கல்வியின் அடிப்படையினை யாம் முதலிற் றெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். இத்தகைய பயிற்சியினைத் "தொழிற்றுறைப் பயிற்சி" யென யாம் பெயரிட்டு யாண்டும் அழைத்துவருவோமாயின் மலைவுண்டாகாது தவிர்த்துக் கொள்ளமுடியும். சகல தேர்ச்சித் தொழிற்றுறைகளிலும் விசேஷப் பயிற்சி ஓர் அங்கமாக அமைந்துள்ளது. எனவே தொழிற்றுறைப் பயிற்சியென்பது, படிப்பித்தலிற்போல பல பாடங்களில் அல்லது பல துறைகளில் விசேஷப் பயிற்சியையும் உள்ளடக்கியிருந்தபோதிலும் அது விசேஷப் பயிற்சி என்றுதான் சொல்லவேண்டும்.

ஒரு சில துறைகளில் விசேஷப் பயிற்சியை மிகவும் இளம் வயதிலேயே ஆரம்பித்தால் அது குறுகிய மனப்பான்மையினை உண்டாக்கும் இயல்பினதாக அமையக்கூடும். இதனால் மிகக் குறுகிய எல்லையுள் உயர்தரத் திறமை ஏற்படலாம். ஆயினும் குணசீலத்தில் விரிந்த மனப்பான்மையும் சமநிலையும் அருகியே காணப்படும். இவ்வுண்மையினை ஓர் உதாரண வாயிலாக எளிதில் விளக்கிக் காட்டலாம். ஒரு மெல்லிய நீளமான கோலை எடுத்து, அதிற் சிறு பாகம் மட்டும் நிலத்தினுட் புதையும்படி செங்குத்தாக நிறுத்தியிருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்தக் கோலானது எப்பக்கமும் சுழன்றும் வளைந்தும் நிற்கும். இதன் பயனாக அது நிமிர்ந்து நிற்கும் தன்மையினையே இழந்துவிடுகின்றது. ஆனால் அகன்ற அடியினையுடைய ஒரு திரிகோண அமைப்பு கூரிய முனையினையுடையதாக இருக்கலாம்; அதன் முனை அதிக உயரத்துக்குச் செல்லவும் கூடும். எனினும்

அதனுடைய அடித்தளம் அகன்றிருப்பதால், அது தன் சமநிலையினை யிழந்து ஈடாடமாட்டாது. கூரிய முனையினையுடைய திரிகோண அமைப்பானது அகன்ற பொதுக் கல்வியை அடிப்படையாகக்கொண்ட விசேஷப் பயிற்சியைச் சிறப்பாக உருவகித்துக் காட்டுகின்றது. மேற்கூறிய உதாரணம் வேறொருவகையிலும் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. ஒரு திரிகோணத்தின் அடி பொதுக் கல்வியை யும் அத்திரிகோணத்தின் குத்துயரம் திறமையினை அல்லது விவேக ஈவினையும் குறிக்குமாயின், மிகுந்த திறமையுள்ள ஒரு பிள்ளை சமநிலை தவறாது தேர்ச்சியின் உச்சியையடைவதற்குப் பொதுக்கல்வியெனும் அடி மிகவும் அகன்றிருத்தல் வேண்டும். ஒரு பிள்ளையின் கல்வியானது ஆடு நுனிப்புல் கறித்தவாறு மேலெழுந்த வாரியாக பாடங்கள் அளவிறந்து தரம் குறைந்து பருமட்டமாகவிருப்பின் அத்தகைய பிள்ளை சோம்பிக்கிடக்கும் அடியினையும் மழுங்கிய அல்லது மொட்டையான உச்சியையும் உடைய விரி திரிகோணம்போலச் சமநிலை தவறித் தடுமாற நேரிடும். உத்தமமான சமநிலை விருத்தியடைவதற்கு ஒவ்வொரு திரி கோணத்தினதும் அடியகலம் அதன் குத்துயரத்துக்கேற்ற தகவுப் பொருத்தமுடையதாயிருத்தல் வேண்டும். எனவே இத்தகைய குறிக்கோளையடைவதற்கு எத்தனைவகையான திறமைகளுண்டோ அத்தனை வெவ்வேறு வகையான பொதுக் கல்விக்கு ஒழுங்கு செய் தாகவேண்டும். இதனை அநுபவசாத்தியமாக நிறைவேற்றும் வழியை ஒருவராவது கண்டுபிடிக்கவில்லை. இதன் பயனாகப் பல்வேறு தேசத் துக் கல்விமுறைகளும் "சாதாரண" பிள்ளையின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கமாக எழுந்த பல்வேறு முயற்சிகளாக அமைந் துள்ளன. மேலும் இத்தகைய முறைகளில் மிகச் சிறந்த திறமை யுள்ள அல்லது மிகக் குறைந்த திறமையுள்ள பிள்ளைகளுக்கு ஏற்ப, கூடிய அல்லது குறைந்த ஏற்பாடுகள் காணப்படுகின்றன. இத்தகைய கல்விமுறைகளின் முக்கிய அம்சங்களைச் சுருக்கமாக ஆராய்வாம்.

சகலருக்கும் ஏற்ற பொதுக் கல்விக்குப் பொதுவான அடிப்படை ஒன்றிருக்கவேண்டு மென்பது யாவருக்கும் ஒத்த முடி பாகும். ஆதாரக்கல்வி ஆரம்பிக்கப்படும் வயது வெவ்வேறு நாடுகளில் வித்தியாசமாகவேயிருக்கின்றது. எனினும் பொதுப்பட நோக்குமிடத் துக் குளிரானதேசங்களில் அது சிறிது பிந்தியே ஆரம்பிக்கப்படுகின்றது எனக்கூறலாம். ஏனெனில் குளிரான தேசங்களில் பிள்ளைகள் மிகவும் பிந்தியே பக்குவ மடைகின்றனர் அல்லது முதிர்ச்சியுறுகின்றனர். சோவியத் ருசியாவில் ஆரம்பக்கல்வி 8-ம் வயதில் தொடக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது 7 வயதில் ஆரம்பமாகின்றது. மேலும் தென்மார்க்கில் 7 வயதிலும், ஒல்லாந்திலும் ஹங்கேரியிலும் 6 வயதிலும் பிரிட்டிஷ் தீவுகளில் 5+ வயதிலும் ஆரம்பமாகின்றது. இலங்கையில் ஆரம்பக்கல்வியை 5+ வயதிலிருந்து தொடங்கவேண்டுமென நிச்ச யித்திருக்கின்றனர்.

இனி விசேஷப் பயிற்சி ஆரம்பிக்கப்படும் வயதைப்பற்றி ஏகமன தான அபிப்பிராயம் காணப்படவில்லை. அதற்குரிய காரணத்தை விளங்கிக் கொள்வதும் கஷ்டமன்று. சகல தேசங்களிலும் உள்ள பிள்ளைகள் விருத்தியடையும் அளவு வேறுபட்டிருக்கின்ற தென்பதை யாம் முதலில் அவதானித்தல் வேண்டும். மேலும் விவேகத்தையும் திறமையையும் பரீட்சிப்பதற்குரிய திட்டமான அறிவின் ஒரு சிறு திவலையையே யாம் பெற்றுள்ளோம். வளர்ச்சி அல்லது விருத்திப் படிகளைப் பரீட்சிக்கும் முறைகள் இன்னும் பரிசோதனை முறையிற்றான் காணப்படுகின்றன. எனினும் பொதுக்கல்வி குறைந்த பட்சம் 14 வயதுவரை ஊட்டப்பட வேண்டும் என்னுங்கொள்கை பெரும்பாலும் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தெனக்கூறலாம். இதற்குப் பல நியாயங்கள் உண்டு. முதலாவது பொதுக்கல்விக்கு நல்ல அத்தி வாரம் இடுவதற்குக்குறைந்த பட்சம் 7 அல்லது 8 வருடம் தேவை. இரண்டாவது 14 வயதுக்குக் குறைந்த பிள்ளையின் மனவளர்ச்சியும்

உடல் வளர்ச்சியும் விசேஷ பயிற்சி பெறுவதற்கு ஏற்றவாறு போதிய முதிர்ச்சி அல்லது பக்குவம் பெற்றிருக்கமாட்டாவாதலின், பொதுக் கல்வியை அவ்வயது வரமுன்னர் நிறுத்தி விட்டால், அப்பிள்ளையின் புத்தி மழுங்கிவிடும். மூன்ருவது, ஊக்கமான உடல்வேலை செய்வதற்கு அல்லது நெடுநேரம் உடல்வேலை செய்யவேண்டிய தொழிற்றுறைப் பயிற்சிபெறுவதற்கு 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுட் பெரும்பாலோருடைய தேகம் முதிர்ச்சி அல்லது வளர்ச்சியடைந்திருக்கமாட்டாது. எனவே பிரதான "விவேக வேற்றுமைப் பரீட்சை"யை 14+ வயதிலன்றி அதற்கு முன்னர் வையாதிருப்பதற்குரிய நியாயம் புலனுகும். 14 வயதுக்குட்பட்ட வயதில் நடத்தப் பெறின் தொழிற்றுறை ஆர்வத்தைப் பரீட்சிப்பதற்கு இதுவரை அறியப்பட்ட எவ்விதப் பரீட்சையினது பெறுபேறும் நம்பத்தகுந்தன்று என்பதை உளநூல் வல்லார் பெரும்பாலும் ஒத்துக்கொள்கின்றனர், எனவே இக்கொள்கையும் யாம் மேற்கூறிய கொள்கைக்கு ஆதாரமாக விருப்பதை நோக்குக. மிகவும் குறைந்த வயதில் விவேக வேற்றுமைப் பரீட்சையை நடத்துவதற்கு ஒரேயொரு காரணம் யாதெனில் நூல்முறைக் கல்விக்குத் தகுதியற்றவர்களுக்கு அந்நூல் முறைக் கல்வியை யூட்டாமல் பிரித்து விடலாம் என்பதே. தொழிற்றுறை ஆர்வத்தை 14 வயதுக்குக்குறைந்த வயதில் உறுதிநிலையுள்ள முறையில் நீங்கள் பரீட்சிக்கமுடியாதெனினும், "பொது விவேகத்திறமை"யைப் பரீட்சிக்கலாம் என்பதை உள நூல் வல்லார் பெரும்பாலும் ஒத்துக்கொள்கின்றனர். எனவே ஒரு பிள்ளை 11 வயதில் அல்லது ஆரம்ப படியின் முடிவில் 85-க்குக்குறைவான விவேக ஈவுடையதாகக் காணப்படின், மேலும் மேலும் நூல்முறைக் கல்வியால் அந்தப்பிள்ளை எப்போதாவது பயனடையக் கூடுமென எதிர்பார்க்கமுடியாது. திறமையற்றவர்களைக் கழிக்கும் பரீட்சையினை ஆரம்ப படியினது முடிவில் வைப்பதற்குரிய நியாயம் இதுவேயாகும். அத்தகைய பரீட்சையின்

பின்னர், கழிக்கப்பட்டோர் பாடசாலையை விட்டு நீங்கலாம் அல்லது ஆரம்ப பாடசாலைகளிலுள்ள விசேஷ மேற்கல்வி வகுப்புகளில் பாட சாலையைவிட்டு நீங்கும் வயதுவரையும் படிக்கலாம். அவர்கள் அங்கே ஸ்தல வியாபாரக் கல்வி பயின்று, எழுத வாசிக்க நன்கு கற்று, குடியி யற்றுறையில் ஆரம்ப பயிற்சி பெறவும் இயலும்.

திறமையற்றவர்களைக் கழிக்கும் பரீட்சை முறையை இந்நாடும் ஏற்றுக்கொள்ளின், உயர்தரக் கல்வி கற்பதிலிருந்து கழித்துவிடப் பட்டவர்களுக்கு அத்தகைய மேற் கல்வி வகுப்புகளில் அளிக்கப்படும் பயிற்சி 14 வயதுக்கு முன்னர் அளிக்கக்கூடிய தொழிற்றுறைப் பயிற்சியொன்றேயாகும். பிரதான விவேக வேற்றுமைப் பரீட்சை கனிஷ்ட மேற்கல்விப் படியின் முடிவில் நடாத்தப்பெறின், சிரேஷ்ட உயர்தரக் கல்விக்குத் "தெரிவு செய்யப்படாதோர்" சிரேஷ்ட தொழிற்றுறைப் பாடசாலைகளில் அல்லது கல்வி விசேஷ விசாரணைச் சபையாரின் அறிக்கையிற் குறிப்பிடப்பட்ட தொழில் முறைப் பாட சாலைகளில் தொடர்ந்து கற்றுவருவர். இப்பாடசாலைகளில் ஒரு தொழிலுக்கேற்ற விசேஷ பயிற்சியளிக்கப்படும். எனினும் அதனோடு கூட முக்கியமான சில பாடங்களைக்கொண்ட பொதுக் கல்வியும் பயிற்சிக் கிரமத்தில் இடம்பெறும். சிரேஷ்ட தொழிற்றுறைப் பாட சாலைகளிலுள்ள பயிற்சிக் கிரமம் தொழிற்றுறைப் பயிற்சியின் இரண் டாவது படியினைக் கொண்டதாகும். (மேற்றர வியாபாரக் கல்விப் பாடசாலைகளில் அளிக்கப்படும் பயிற்சிக் கிரமம் முதல்படி அல்லது ஆகக் குறைந்த படியாகக் கொள்ளப்படும்) மாகாணத்துப் பலதுறைத் தொழிற் பாடசாலைகளில் அளிக்கப்படும் பயிற்சிக் கிரமம் தொழிற் றுறைப் பயிற்சியின் மூன்றாவது படியாகும். உயர்தரப் பாடசாலை யில் (எஸ். எஸ். சி. பரீட்சையில் தொழிற்றுறைப் பாடங்கள் எடுக்க ஏற்பாடு செய்யப்படுமாயின்) எஸ். எஸ். சி. பரீட்சையிற் சித்திய டைந்தோர் மேற்கூறிய பாடசாலைகளில் சேர்க்கப்படுவர்.

இலங்கைத் தொழிற்கல்விக் கல்லூரியிலும் சர்வகலாசாலையிலும் அளிக்கப்படும் பயிற்சி தொழிற்றுறைப் பயிற்சியின் நான்காவது படியாகும். எனவே தொழிற்றுறைப் பயிற்சியின் ஒவ்வொரு படியும் மாணவர்களை அவ்வப்படிக்குரிய தேர்ச்சிபெற்ற வேலைகளைச் செவ்வனே புரிவதற்குத் தகுதியுள்ளவர்களாக்கிவிடத்தக்கதாயமையவேண்டும் என்பது தெற்றெனப் புலனாகும். ஆகக் குறைந்த படியிலுள்ள கமத் தொழில் வேலையாளர், கொல்லர், தச்சர், மோட்டார் சாரதிகள் தொடக்கம், இரண்டாம் படியிலுள்ள பயிற்சி பெற்ற கமக்காரர், பாற்பண்ணையாளர், (மெக்கானிக்) கம்மாளர் ஆதியோர், மூன்றும் படியிலுள்ள தேர்ச்சி பெற்ற மேற்பார்வையாளர் ஆதியோர், பட்டதாரிகளாகிப் பயிற்றப்பட்ட தகுதிவாய்ந்த நுண்தொழில் விற்பன்னர் இறுதியாகச் சகல படிகளிலும் உள்ளவர்கள் தத்தமக்கேற்ற படிகளில் உள்ள தொழிற்றுறைப் பயிற்சியைப் பெறுவார்கள்.

---

# மொழிப் பயிற்சி

## நாலாம் பிரிவு

## இலக்கணங் கற்பித்தல்

(முற்றொடர்)

இலக்கணத்தை ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டுமா? மொழிப் பாடத்தில் அது கட்டாயமாக இடம்பெற வேண்டுமா? இலக்கணத்தின் நோக்கம் மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் உதவி செய்வதேயெனின், பிறர் பிழையறப் பேசுவதையும் எழுதுவதையுங் கேட்டும் வாசித்தும் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாமாகையால் இலக்கணத்தைக் கற்பிக்காது விட்டுவிடல் கூடாதா? இவைபோன்ற வினுக்களை இக்காலத்திற் பலர் வினவுகின்றனர். பாடசாலைகளிலும் இலக்கணம் முறையாகக் கற்பிக்கப் படாமையாலும், கற்பிக்கும் ஆசிரியர்களிற் பலருக்குப் போதிய இலக்கண அறிவும் மாணவர்களுக்கு ஆர்வத்தை யூட்டிக் கற்பிக்கும் நன்முறைகளிற் பயிற்சியும் இன்மையாலும், மாணவர்களும் இலக்கணத்தை வெறுக்கிறார்கள்.

கீழ் வகுப்புக்களில் இலக்கணமே வேண்டாம். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் என்று இலக்கண நூலாசிரியர்களே கூறுகிறார்கள். கீழ் வகுப்பு மாணவர்களுக்கு இலக்கணத்தை விளங்கிக் கொள்ளுதற்கு வேண்டிய மொழி அறிவும் இலக்கிய அறிவும் ஏற்பட நாட்செல்லும். ஆகவே சொல், பொருள், மொழி அறிவுகள் வளம் பட முன் இலக்கணத்தைப் புகுத்துவது பொருத்தமற்றதென்பது வெளிப்படை; சிறுவர்களுடைய மனநிலைக்கும் ஏற்றதன்று. இவ் வகுப்புக்களில் ஆசிரியர் பிழையறப் பேசியும், நல்ல உரைநடை நூல்

களை வாசிப்பித்தும் மாணவர்களுடைய மொழி அறிவை வளம்படுத்தலே சாலச் சிறந்தது.

மத்திய வகுப்புக்களிலே மொழிப் பாடத்தோடு தொடர்புபடுத்தி இலக்கணப் பகுதிகள் சிலவற்றைக் கற்பிக்கலாம். மேல் வகுப்புக்களில் மொழிப் பாடத்தின் ஒரு பகுதியாகவோ அன்றேல் தனிப்பாடமாகவோ இலக்கணத்தைக் கற்பிக்கலாம். இலக்கணம் மொழிப்பயிற்சியைத் தூய்மை செய்து வளம்படுத்துவதற் கின்றியமையாததென்பதை மாணவர்கள் உணர்ந்து ஈடுபடத்தக்கதாக ஆசிரியர்கள் இலக்கணத்தைக் கற்பித்தல் வேண்டும். இவ்வகுப்புக்களில் பிரதானமாகக் கட்டுரைகள், கடிதங்கள், கதைகள் முதலிய எழுத்தப்பியாசங்களைத் திருத்தும்பொழுது அவற்றிலுள்ள பிழைகளை மாணவர் உணர்வதற்கு இலக்கண அறிவு இன்றியமையாதது. எவ்வளவு சிறந்த நூல்களை நன்கு படித்தவர்களும் எழுதும் பொழுது போதிய இலக்கணப் பயிற்சி இன்மையால் சில பிழைகளை விட்டுவிடுகிறார்கள். இக்காலத்தில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் பலவற்றில் பிழைகள் மலிந்திருப்பதற்கும் இதுவே காரணமாகும். இலக்கணத்தை மொழிப் பாடத்தோடும் கட்டுரைப் பாடத்தோடும் தொடர்புபடுத்தி நன் முறையிற் கற்பித்தால் பிழையற எழுதுதற்கும் பேசுதற்குமுரிய இலக்கண அறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்வார்கள். மிற்க,

உலகத்திலுள்ள மொழிகளிற் சிலவே சிறந்த இலக்கண வரம்புடையன. இவற்றுள்ளும் இக்காலத்தில் வழங்கும் மொழிகளில் நமது தமிழ் மொழியே சிறந்த இலக்கண அமைதி உடையது. ஒரு மொழியின் உயிர்நிலை அதன் இலக்கியமே என்பது அறிஞர் கண்ட முடிபு. தமிழ் இலக்கியத்தை விளங்கிச் சுவைப்பதற்கு இலக்கண அறிவும் இன்றியமையாதது. உதாரணமாகப் புகழேந்திப் புலவர் பாடிய நளவெண்பாவிலிருந்து ஒரு செய்யுளை எடுத்துக்கொள்ளுவோம்.

" தேன்பிடிக்குந் தண்டுழாய்ச் செங்கட் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல்—தான்பிடிக்கப்
பொற்புள்ளைப் பற்றித்தா வென்முள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயாள் தொழுது. "

இந்தப் பாட்டின் கருத்தை நன்கு விளங்கிக்கொள்வதற்குச் சில இலக்கண விஷயங்களை நாம் அறிந்திருக்க வேண்டும். அன்றேல் "கருமுகிலைப் பார்த்து மானைப்பிடிக்கச் சொன்ன மயில்" என்றுதான் நாம் விளங்குவோம். 'கருமுகில்' என்பது கருமேகத்தின் நிறத்தை யுடைய இராமனையும், 'மயில்' என்பது மயிலின் சாயலையுடைய சீதை யையும் ஆகுபெயராகக் குறிக்கின்றன. இந்த ஆகு பெயரை அறியா விடில் நாம் பாட்டின் பொருளையே அறிய முடியாது. ஆகவே தமிழ் இலக்கியத்தை நன்கு விளங்கிச் சுவைப்பதற்கு இலக்கணமும் வேண் டும் என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. முன்னர்க் கூறியவாறு தமிழ் ஒரு பழைய மொழியாகவும் இலக்கண வரம்புடைய மொழியாகவும் இருப்பதால் தமிழ் மொழிப் பயிற்சி நிரம்புவதற்கு இலக்கணம் இன்றியமையாதது. தமிழ் மொழியின் இச்சிறப்பியல் புகளை நன்குணரும் ஆற்றலில்லாதாரே ஆங்கிலம் முதலிய மொழி களிலும் பார்க்கத் தமிழ் மொழிக்கு அதிக இலக்கணம் தேவைப்படு கிறதேயென்று கருதுவார்கள்.

இலக்கண விஷயங்களைப் பெரும்பாலும் நாலாம் வகுப்பிற் றொடங்கிக் கற்பிக்கலாம். வாக்கியம், சொல், தொடர், புணர்ச்சி, அணி, யாப்பு முதலியவற்றின் இலக்கணத்தை முறையாகக் கற்பித்தலே பொருத்தமானது.

நாலாம் வகுப்பிற்கு வாக்கியத்தின் எழுவாய் பயனிலை முதலி யனவும் பெயர்ச் சொல், தெரிநிலை வினைச் சொல் முதலியனவும், உடன் மேல் உயிர் வருதல், உடம்படுமெய் முதலியனவும் கற்பிக்கப்

படலாம். திணை, பால், காலம் முதலியவற்றைப்பற்றிய ஆரம்ப அறிவும் இன்றியமையாதது.

ஐந்தாம் வகுப்பில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழி முதலியனவும், குணப்பெயர், தொழிற்பெயர் முதலியனவும், இருதிணை, ஐம்பால், மூவிடம், முக்காலம், வேற்றுமைகள், தெரிநிலை வினையெச்சங்கள், எதிர்மறை, உடன்பாடு முதலியனவும் விரிவாகக் கற்பிக்கப்பட வேண்டும்.

ஆறும் வகுப்பில் ஆறுவகைப் பெயரும், வினைச் சொற்களின் வகையும், வேற்றுமை யுருபுகள், ஏ, ஓ, போன்ற இடைச் சொற்கள், ஆகுபெயர், குற்றியலுகரம், இலகுவான புணர்ச்சி விதிகள், உவமையணி முதலியனவும் கற்பிக்கப்படலாம்.

ஏழாம் வகுப்பில் அளபெடை, போலி, தொடர்கள், பகுதி, விகுதி, இடைநிலை எனும் பகுபத உறுப்புக்கள், வேற்றுமை உருபுகளும் பொருள்களும், வினைச் சொற்களின் பல்வகை ரூபங்கள், உருவகம், சிலேடை முதலிய அணிகள், வெண்பா, ஆசிரியப்பா முதலியவற்றின் இயல்புகள் கற்பிக்கப்படலாம்.

எட்டாம் வகுப்புக்கும் மேல் வகுப்புக்களுக்கும் பெயர்ச் சொற்களின் வகையும், உருபுமயக்கம், இடைச் சொல், உரிச் சொல், முதலியனவும், வினைச் சொற்களின் வகையும், தழுவு தொடர் தழாத் தொடர்களும், பல்வகைப் புணர்ச்சிகளும் தற்குறிப்பு, உயர்வு நவிற்சி தன்மை, ஒட்டு முதலிய அணிகளும், விருத்தம், கலித்துறை முதலியவற்றின் இயல்பும் கற்பிக்கப்படலாம்.

வித்தியா பகுதியாருடைய பாடத்திட்டத்தில் இவற்றுட் சிலவே காட்டப்பட்டுள. ஆதலின் ஈண்டுக் கூறப்பட்டவற்றை எல்லாம் தொடர்பு படுத்தி, வாசிப்பு எழுத்துப் பாடங்ளோடு சேர்த்துக் கற்

பித்தல் வேண்டும். இங்கு குறிக்கப்பட்ட திட்டத்தைமுடிபான திட்டம் எனக் கொள்ளற்க. ஆசிரியர்கள் தமது அனுபவத்தையும் மாணவர் களின் முன்னறிவு, சூழல் முதலியவற்றையும் கருதிப் பொருத்தமான திட்டங்களை அமைத்துக்கொள்ள வின்றியமையாதது.

புணர்ச்சி விதிபோன்ற விஷயங்களைக் கற்பித்தற்கு இருமுறை களுண்டு. ஒன்று விதிவருமுறை மற்றது விதிவிளக்க முறை. இவற் றுள் விதி விளக்க முறையே முற்காலத்தில் ஆசிரியர்களால் மேற் கொள்ளப்பட்டது. கீழ் வகுப்புகளுக்கு இது பொருத்தமற்றது; மாணவர்களுக்கு அலுப்பையும் வெறுப்பையும் கொடுக்கத்தக்கது. ஆகவே இதனை விடுத்து விதி வருமுறைப்படியே கற்பிக்குக. விதிவரு முறை என்பது உதாரணங்களிலிருந்து பொது விதிக்குப்போதல்; இதனை ஆகமன முறை என்றுங் கூறுவர். இதில் மாணவர்கள் தாம் அறிந்த உதாரணங்களை உற்று நோக்கி ஒப்பிட்டுப் பார்த்து அவற்றிலி ருந்து காணக்கூடிய ஒரு பொது உண்மையை அல்லது விதியைத் தாமா கவேகாண்பர். பெண்+ஆசை, மண்+ஆசை, புள்+இனம், மெல்+ஓசை, மெய்+ஈறு முதலிய சொற்களை உற்று நோக்கச்செய்து அவை புணரும் பொழுது ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்து தனிக்குறில் முன்னே வரும் ஒற்றெழுத்து உயிர்முதன் மொழி வந்து புணரும்பொழுது இரட்டும் எனும் விதியை மாணவரே அறிந்து கொள்ளச்செய்யலாம்.

இம்முறையை ஆசிரியர் மேற்கொள்ளும் பொழுது பின்வரும் விஷயங்களைக் கருத்திலிருத்திக் கொள்ள வேண்டும்.

(1) உதாரணங்களை மாணவரிடமிருந்தே பெறுதல்.

(2) ஒப்பிட்டு உற்று நோக்கிப் பொது விதியைக்காண வழிப் படுத்தல்.

(3) கண்டபொழுது விதியை மொழிப்பாடங்களில் பொருத்திப் பயிலச் செய்தல்.

இக்கட்டுரையை முடிப்பதற்கு முன் இலக்கணங் கற்பிக்கும் பொழுது ஆசிரியர்கள் நன்கு கருத வேண்டியன சிலவற்றைச் சுருக்க மாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

(அ) இலக்கணத்தை வாசிப்பு, எழுத்துப் பாடங்களோடு தொடர்பு படுத்திக் கற்பித்தல் வேண்டும்.

(ஆ) விதி வரு முறைப்படி தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லுதல் வேண்டும்.

(இ) தேவையற்ற சூத்திரங்களையும் உரைகளையும் நெட்டுருப் பண்ணும்படி வற்புறுத்தல் கூடாது.

(ஈ) உதாரணங்கள் மாணவர்களுடைய அனுபவத்தோடும் மொழி அறிவோடும் இசைய வேண்டும்.

(உ) இலக்கணத்தைப் படிப்பதின் நோக்கம் மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் வேண்டிய ஆற்றலைப் பெறுவதேயன்றி இலக்கண அறிவைத் தனியாகப் பெற்றுக் கொள்வதன்று என்பதை மாணவர் அறிந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.

(ஊ) இலக்கண நூல்களைப் பின்பற்றிக் கற்பிக்காது அவற்றிலுள்ளவற்றை வகுப்புக்கேற்க ஒழுங்கு செய்து கற்பித்தல் வேண்டும்.

(தொடரும்)

கா. போ. இரத்தினம்.

## "சிறிய" அரசினர் தமிழ்ப் பாடசாலைகளில் தலைமை ஆசிரியர்களுக்கான காலியான இடங்கள்.

சிறிய அரசினர் பாடசாலைகளில் காலியாயிருக்கும் தலைமை ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படும். இவற்றின் விபரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

2. பயிற்றப்பட்ட இரண்டாம் வகுப்புத் தராதரப் பத்திரம் அல்லது அதற்கு மேலான தகைமையுடைய அரசினர் சேவையிலுள்ள ஆசிரியர்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

3. சுகத்துக்குரிய இடங்களிலுள்ள பாடசாலைகளிலிருக்கும் காலியான இடங்களை நிரப்பும்பொழுது, தற்போதைய பாடசாலைகளில் குறைந்தது இரு வருடங்களாவது கடமை புரிந்து தற்பொழுது தூரமான இடங்களிலும் மலேரியாவுள்ள இடங்களிலும் சேவை செய்யும் தலைமை ஆசிரியர்களுக்குச் சலுகை காட்டப்படும். ஆகையால் தலைமை ஆசிரியர்களாக உத்தியோக உயர்ச்சி பெற விரும்பும் உதவி ஆசிரியர்களுக்கு தூரமான இடங்களிலும் மலேரியாவுள்ள இடங்களிலுமுள்ள காலியான இடங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. அங்ஙனம் அவர்கள் செய்யத்தவறின், அத்தகைய இடங்களுக்கு விண்ணப்பித்த அவர்களிலும் குறைந்த சேவையுள்ள ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். அதனால் விண்ணப்பஞ் செய்யாத கூடிய சேவையுள்ள ஆசிரியர்களுக்கு முன் இவர்கள் உத்தியோக உயர்ச்சி பெறுவர்.

4. ஒவ்வொரு இடத்துக்கும் புறம்பான விண்ணப்பம் அனுப்புமிடத்து ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு ஆசிரியரொருவர் விண்ணப்பிப்பதற்கு எவ்வித தடையுமில்லை. ஒரு விண்ணப்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்கள் குறிக்கப்பட்டால், முதலிற் குறிக்கப்பட்ட இடத்துக்கே அது கவனிக்கப்படும்.